# உறவுமுறையிலான சபையில் வாழ்தல் I

Wayne Jacobsen

“2000 ஆண்டுகளாக இயேசு செய்துகொண்டிருப்பதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?”

ஒரு கூட்டம் விசுவாசிகளுடன் சேர்ந்து மத்தேயு 16ஆம் அதிகாரத்தை நான் படிக்கும்போதெல்லாம் இந்தக் கேள்வி நிச்சயமாக எழும். இங்கு மட்டும்தான் இயேசு சபையைப்பற்றி தம் சீடர்களுக்குக் கொடுத்த கட்டளை கூறப்பட்டிருக்கிறது: “நான் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வ தில்லை.” “நீங்கள் சபையைக் கட்ட வேண்டும்,” என்று அவர் தம் சீடர்களிடம் சொல்லவில்லை. அவர் ஒரு நிறுவனத்தைப்பற்றிய வரைபடத்தை அவர்களுக்குக் கொடுக்கவில்லை. தாமே தம் சபையைக் கட்டப் போவதாகவும், அது இருளின் எந்தத் தாக்குதலையும் எதிர்த்துத் தாக்குப்பிடிக்கப் போதுமான அளவுக்குப் பலமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

எனவே, அவர் எப்படிக் கட்டிக்கொண்டிருக்கிறார் என்பதை மதிப்பிடுவது இயல்பாகவே எழுகிறது. அவர் 2000 ஆண்டுகளாகக் கட்டிக்கொண்டேயிருப்பாரானால், நாம் பார்ப்பதற்கு அல்லது மற்றவர்களுக்குக் காட்டுவதற்கு நம்மிடம் என்ன இருக்கிறது? எல்லாவிதமான மக்களிடமும் நான் இந்தக் கேள்வியைக் கேட் டிருக்கிறேன். பாஸ்டர்களின் கூட்டத்திலும், மாநாடுகளிலும் நான் இதைக் கேட்டிருக்கிறேன். நான் இந்தக் கேள்வியைக் கேட்கும்போது, அங்கு என்ன நடக்கும் தெரியுமா? சிலர் மேலும் கீழும் நெளிவார்கள்; வேறு சிலர் படபடப்புடன் நகைப்பார்கள்; “தேவன் அப்படி ஒன்றும் சிறப்பாகச் செய்துவிடவில்லை,” என்று அவர்கள் சொல்லத் துணிய மாட்டார்கள். ஆனால், அதையே வேறு வகையில் நாசுக்காகச் சொல்வதற்கு அவர்களுக்குத் தெரியும்; அதே நேரத்தில், சபை பிரிவினைகளால் துண்டுதுண்டாக்கப்பட்டிருக்கிறது என்றும், ஒழுக்கக்கேட்டினால் அவமானப்பட்டிருக்கிறது என்றும், அதின் அகந்தையினால் நிந்திக்கப்பட் டிருக்கிறது என்றும், அதின் தவறான முன்னுரிமைகளால் அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், இயேசு சுவிசேஷங்களில் நமக்கு மாதிரியாகக் கொடுத்திருக்கிற ஊழியத்தைச் செய்வதிலிருந்து வெகு தூரத்தி லிருக்கிறது என்றும் அவர்களுக்குத் தெரியும்.

ஒன்று, இயேசு அவ்வளவு சிறப்பான வேலையைச் செய்துவிடவில்லை என்று முடிவு செய்ய வேண்டும். அல்லது அவர் சபை என்றழைப்பதற்கும், நாம் செய்துகொண்டிருப்பதற்கும் இடையே ஒரு பெரிய வித்தி யாசம் இருக்கிறதா என்று நாம் பரிசீலித்துப்பார்க்க வேண்டும்.

தேவனுடைய சபை நான் நினைத்தபடி இல்லாததைக் கண்டு அடிக்கடி ஏமாந்துபோனேன். தேவனுடைய மக்கள் தேவனுடைய நலன்களுக்குத் தூரமான முன்னுரிமைகளில் மூழ்கி இருப்பதையும், நம்முடைய வாழ்க்கையில் அல்லது உலகத்தில் தேவனுடைய இராஜ்ஜியத்தை விரிவாக்குவதற்குப்பதிலாக, நிறுவனத் திற்கு அனுகூலமாகத் தோன்றக்கூடிய வழிகளில் காரியங்களைச் செய்வதையும் கண்டபோது, சபையின் பரிதாபமான நிலையைப்பார்த்து நான் புலம்பினேன்.

ஆனால், இப்போது நான் புலம்புவதில்லை; ஏனென்றால், நம் மதரீதியான நிறுவனங்கள் தேவன் பார்க்கிற சபை இல்லை என்பதை நான் சமீபத்தில் கண்டுகொண்டேன். தம் குமாரனைத் தங்கள் கர்த்தராகவும், தலைவ ராகவும் அறிந்த எல்லா மக்களையுமே தேவன் ‘சபை’ என்றழைக்கிறார். அவர்கள் அகில உலகமெங்கும் சிதறியிருக்கிறார்கள். அவர்கள் அவரை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ளவும், அவருடைய நற்குணத்தை இந்த உலகத்தில் கண்கூடாகக் காட்டவும் வளர்ந்துகொண் டிருக்கிறார்கள். இதுவே தேவன் தம் குமாரனுக் காக ஆயத்தம்பண்ணிக்கொண்டிருக்கிற மணவாட்டி. மணவாட்டியின் பகுதிகளை நான் உலகமெங்கும் பார்த்திருக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் சபை பலவீனமாகவும், பிளவுண்டதாகவும், சீரழிந்ததாகவும் இல்லாமல் ஒவ்வொரு நாளும் அழகிலும், பலத்திலும், வல்லமையிலும் வளர்ந்துகொண்டிருக்கிறது. தம் சபையைக் கட்டும் வேலையை அவர் எப்படி செய்துகொண்டிருக்கிறார்? வியத்தகு முறையில் செய்து கொண்டிருக்கிறார்! அவருடைய மக்கள் இந்த உலகத்தின் எல்லா மூலை முடுக்குகளிலும் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய பெயரை மக்கள் இழிவுபடுத்துவதற்குப்பதிலாக, மகிமைப்படுத்த ஒருவரோடொருவர் உறவுகொள்வதற்கான வழிகளைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

### *தேவன் எதை சபை என்றழைக்கிறார்*

ஆயினும், அதைப் பார்ப்பதற்கு நாம் சபை என்றழைக்கிற நிறுவனங்களையும், கட்டிடங்களையும் கடந்து சென்று, அவரில் வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களைக் காண வேண்டும். நான் சொல்வதைத் தயவுசெய்து தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். அந்த நிறுவனங்களெல்லாம் பொல்லாதவை என்று நான் அவைகளுக்கு விரோதமாகப் பேசவில்லை. அவைகள்தான் சபை என்று குழப்பாதீர்கள் என்று மட்டும் நான் சொல்லு கிறேன். ஆம், தேவனுடைய சபையின் ஒரு பகுதியாக இருக்கிற, அவரை இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள வளர்ந்துகொண்டிருக்கிற, அநேக மக்கள் அங்கு போகிறார்கள். ஆனால், கேள்வி அதுவல்ல. மாறாக, உலகத்தில் தேவனுடைய வேலையைப் பார்க்க, தங்களைத் தாங்களே சபை என்றழைத்துக்

கொண்டிருக்கிற குழுக்களைத் தாண்டிச் சென்று, அதைவிடப் பெரிய சித்திரத்தை நீங்கள் பார்க்க வேண் டும்; உங்கள் நகரெங்குமிருந்தும், உலகெங்குமிருந்தும் தேவன் தம்மிடம் அழைத்துக்கொண்டிருக்கும் மக்களே அந்தப் பெரிய சித்திரம்.

இல்லையென்றால், மதரீதியான அமைப்புமுறைகளை சபையென்று குழப்பி, தேவன் தமக்காக ஒரு மணவாட்டியை ஆயத்தம்பண்ணிக்கொண்டிருக்கிற மாபெரும் காரியத்தை நாம் தவறவிட்டுவிடு வோம். தேவன் சபை என்றழைக்கிறதையே நாமும் சபை என்றழைக்க வேண்டும். இல்லையென்றால், அர்த்தம் இல்லாத காரியங்களைப் பேசுவதிலேயே நாம் காலத்தைக் கழித்துவிடுவோம்.

எடுத்துக்காட்டாக, சமீபத்தில் நான் ஓர் இளம் தம்பதியைச் சந்தித்தேன். ஒரு சில மாதங்களுக்கு முன்பு அவர்கள் போதுமான அளவுக்குப் பட்டுவிட்டார்கள். புறங்கூறுதலைக் கேட்டுக்கேட்டுக் களைத்துப் போனார்கள்; ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்களில் ஒரு பார்வையாளராக இருந்து சலித்துப்போனார்கள்; தேவனுக்காக இன்னும் அதிகமான காரியங்களைச் செய்வதற்காகத் தந்திரமாகக் கையாளப்பட்டதால் சலிப்படைந்து போனார்கள்; அளவுக்கு அதிகமான பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டதால் எரிந்து கருகிப் போனார்கள். எனவே, “நாங்கள் சபையைவிட்டு வெளியேறிவிட்டோம்,” என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

“நீங்கள் சபையைவிட்டு எப்படி வெளியே போக முடியும்? நீங்கள் சபையைவிட்டு வெளியே போக முடியாது. நீங்கள் இயேசுவை விட்டு விலகிப்போனால்தான், சபையைவிட்டும் போக முடியும்,” என்று நான் கூறினேன்.

நிச்சயமாக அவர்கள் சபையைவிட்டு வெளியே சென்றுவிடவில்லை. தாங்கள் இருந்த குழுவைவிட்டு, தேவ னுடைய ஜீவனின் உண்மையான வெளியாக்கத்தைக் கண்டுபிடிக்கும் நம்பிக்கையோடு அமைப்புமுறையி லான மதத்தைவிட்டு வெளியே சென்றுவிட்டார்கள் என்ற அர்த்தத்தில்தான் அவர்கள் அப்படிக் கூறினார் கள். அமைப்புமுறையிலான மதத்தைவிட்டு வெளியேசெல்வது சபையிலிருந்து வெளியே செல்வதிலிருந்து மிகவும் வித்தியாசமானது. நம் சொற்றொடர்களைக் குறித்து நாம் கவனமாக இருப்போமாக! மதரீதியான நிறுவனங்கள் ஒன்றுபட்டு ‘சபை’ என்ற பதத்தைத் தெரிந்தெடுக்கும்போது, அவைகள் உண்மையிலேயே சபைதான் என்று நினைத்து நாம் குழம்பிவிடுவது எளிது. ஆனால், அவை சபை அல்ல. அவை சபையின் ஒரு பகுதியாக இருக்கிற மக்கள் கூடிவருவதாக இருக்கக்கூடும். ஆனால், அவர்கள் தங்களிலும், தங்க ளாலும் சபை அல்ல.

இயேசு கிறிஸ்துவின் சபையை எந்த நிறுவனத்திற்குள்ளும் ஒருபோதும் அடைத்துவைக்க முடியாது. உண்மையில், அவர் வேலைசெய்கிற முறையைப் பார்த்தால், மிகவும் திறமையாகக் கட்டப்பட்ட அமைப்புமுறைக்குள்கூட சபையைப் பொருத்துவது சாத்தியமேயில்லை.

***தனியே சுற்றித்திரிபவர்கள் விண்ணப்பிக்க வேண்டாம்.***

“இப்படிப்பட்டவர்கள் இயேசுவின் ஜீவனில் ஒருபோதும் செழித்தோங்கி வளராமல், தனியே சுற்றித்திரிபவர் களாக மாறுவார்கள்,” என்று மக்கள் சொல்வதை நீங்கள் ஒருவேளை கேள்விப்பட்டிருக்கக்கூடும். உண்மை யாகவே, தேவனுடைய மக்களுக்கும் இதற்கும் நீண்ட தூரம் இருக்கிறது. தாங்கள்தான் சபை என்று பறை சாற்றுவதால் நிறுவனங்கள் சபையாக இருக்க முடியாது; அதுபோல தனிமனிதர்களும் சபையாக இருக்க முடியாது.

அப்படியானால், உலகத்தில் யார்தான் சபை? “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” என்று பேதுரு சொன்ன அதே அறிக்கையை வாழ்பவர்கள் சபை இல்லையா? நீங்கள் அவரை உங்களுடைய கர்த்தராகவும், தலைவராகவும் பின்பற்றி, தலையாகிய அவரின்கீழ் வாழும்போது, நீங்கள் சபையின் ஒரு பகுதியாக இருக்கிறீர்கள். இப்படி வாழ்கிற வேறு யாரோ ஒருவரைப் பின்பற்றுவதால் நீங்கள் சபையாக இருக்க முடியாது; நீங்களே இப்படி வாழ வேண்டும்.

அவரைப் பின்பற்றுவது உங்களைத் தனித்தியங்குகிற சுயாதீனத்துக்கு நடத்தாது. அது எப்படி அப்படி நடத்தும்? தேவன் ஒரு ‘சமுதாயம்’; எங்கெல்லாம் அவர் அறியப்படுகிறாரோ, அங்கெல்லாம் அவருடைய மக்களிடையே உண்மையான ‘சமுதாயம்’ எழும்பும். பிதா குமாரன் ஆவியானவர் தங்களுக்கிடையே ஜீவனையும், அன்பையும். மகிமையையும் பகிர்ந்துகொள்கிறார்கள்; இதிலுள்ள அப்பழுக்கற்ற மகிழ்ச்சி யையும், அற்புதத்தையும் அறிந்து, அவர்கள் நித்தியத்திற்கும் மெய்யான சமு தாயத்தில் வாசம்செய்கிறார் கள். நீங்கள் அவருடைய அன்பைத் தொட்டுவிட்டால், அது தேவன் உங்கள் பாதையில் கொண்டுவருகிற வர்களிடம் உங்களை ஈர்க்காமல் விடாது; அது உங்களை மற்றவர்களிடம் ஈர்ப்பதை நீங்கள் காண்பீர்கள்.

சகோதர சகோதரிகள் உண்மையான ஐக்கியத்தில் ஒருவரோடொருவர் உறவுகொள்ள ஆரம்பிக்கும் போது, ஒரு காரியத்தைக் கண்டுகொள்வார்கள்; தேவனைப்பற்றி தாங்கள் அறிந்திருப்பது வெறுமனே ஒரு பகுதி தான் என்பதையும், அதையும் மங்கலான ஜன்னல்மூலமாகப் பார்ப்பதுபோல்தான் பார்க் கிறோம் என்பதை யும் அவர்கள் சீக்கிரத்தில் கண்டுகொள்வார்கள். ஆனால், அவரை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள வேண்

டும் என்று வளர்ந்துகொண்டிருக்கும் விசுவாசிகளுக்கிடையிலான ஐக்கியத்தில் ஞானமும், வெளிப்பாடும் நிறைவாக இருக்கின்றன. எனவேதான், சபை என்பது “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிற வருடைய நிறைவு” என்று எபேசியர் 1ஆம் அதிகாரத்தில் பவுல் கூறுகிறார்.

எந்தத் தனிப்பட்ட ஒரேவொரு குழு மட்டும் இப்படிப்பட்ட வியத்தகு வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற முடியுமா என்று கற்பனைசெய்து பாருங்கள்! தேவனைப்பற்றிய நம் பார்வை பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதற்குக் காரணம் என்ன? ஒரே காரியத்தை ஒரே வகையில் பார்க்கிற மக்களை மட்டுமே நிறுவனங்களால் ஒன்றாக இழுத்துச்சேர்க்க முடியும் என்பதுதான் காரணம். மங்கலான கண்ணாடியின்மூலம் அவர்கள் பார்க்கும் பார்வை ஒருபோதும் தெளிவடைவதேயில்லை. வேறு யாரும் பார்ப்பதைவிட தாங்கள் பார்ப்பதுதான் மிகவும் சரியானது, துல்லியமானது என்ற உறுதிப்பாடோடுதான் அவர்கள் வளர்கிறார்கள்.

ஆயினும், தேவ வகையான சமுதாயம் ஜீவிக்கும் தேவனோடு துடிப்பான நட்பை ஆசையாய்த் தேடுகிற மக்களுக்கிடையே எழும்புகிறது. தேவனுடைய ஜீவன் சபை என்றழைக்கப்படுகிற அமைப்பின்மூலமாகத்தான் மக்களுக்குப் பாய்ந்தோடுகிறது என்று நான் நினைத்தேன். ஆனால், அது அப்படியல்ல. ஜீவன் சபையில் இல்லை; ஜீவன் இயேசுவில் மட்டுமே இருக்கிறது.

போஷிக்கப்படுவதற்காக அல்லது வரப்போகிற இன்னொரு வாரத்தைக் கடந்துசெல்ல தங்களை சூடேற்றிக்கொள்வதற்காக கூடிவருகிறவர்கள், உறவுமுறையிலான சபை என்னவென்பதை முற்றிலும் தவறவிட்டுவிடுகிறார்கள். ஜீவனை அவரில் மட்டுமே நாம் காண முடியும்; ஜீவனை அவரில் நாம் ஒருமுறை கண்டுகொண்டால் போதும், உடனே மற்ற விசுவாசிகளுடனான நம் உறவு அந்த ஜீவனை ஒன்றாகச்சேர்ந்து பகிர்ந்துகொள்வதற்கு நம்மை அனுமதிக்கிறது. ‘சபை’ என்பது அவரை அறிந்துகொள்வதற்குப் பதிலீடாக, மாற்றுப்பொருளாக, ஒருபோதும் மாற முடியாது. எந்த மதரீதியான அமைப்புமுறையில் நாம் இருக்கிறோமோ, அந்த அமைப்புமுறைக்கு ஒத்தசாயலாக்கப்படுவதின்மூலம் நாம் அவரைப் பின்பற்ற முடியாது; நாம் ஏன் அப்படிச் செய்ய விரும்ப வேண்டும்? ஒவ்வொரு நாளும் நாம் அவரை அறிகிற மகிழ்ச்சியை அவர் நம் ஒவ்வொருவருக்கும் தந்திருக்கிறார்.

***நிறுவனத்துக்குரிய இயக்கவிதி***

இந்தக் காரணத்தினால்தான், உறவுமுறையிலான கிறிஸ்தவத்திற்கு வளர்ந்துகொண்டிருக்கிற, தனிப்பட்ட உறவு மிகவும் முக்கியமாகும். ஜீவனுள்ள தேவனை அறியவும், அவரைப் பின்பற்றவும் மக்கள் ஆயத்தமாக்கப்படும்போது மட்டும்தான் இது ஆரம்பிக்க முடியும். அவருடன் வளர்ந்துகொண்டிருக்கிற உறவு இருக்கும்போது, மற்ற விசுவாசிகளுடன் எப்படி உறவுகொள்ள வேண்டும் என்று அது உங்களுக்குப் போதிக்கும். இது தலைகீழாகப் பாயாது; அதாவது விசுவாசிகளுடன் வைத்துள்ள உறவு, தேவனோடு எப்படி உறவுகொள்ள வேண்டும் என்று போதிக்காது. பல வருடங்களாக இப்படிச் செய்ய முயன்றதால், அது ஒவ்வொரு நாளும் தேவனை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ள வேண்டும் என்று உண்மையாகவே விரும்புகிறவர்களை ஏமாற்றியிருக்கிறது.

சபை வாழ்க்கைக்கான மாதிரி, இயேசு தம் சீடர்களுடன் கொண்டிருந்த உறவில் காணப்படுகிறது என்று ஜீன் எட்வர்ட்ஸ் சொன்னது சரிதான். “ஆராதனை” எப்படி நடத்த வேண்டும் அல்லது ஒரு நிறுவனத்தின் flow chartயை எப்படிக் கட்டவேண்டும் என்று அவர் ஒருபோதும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவில்லை. சபை வாழ்க்கை என்றால் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வது அல்லது ஒரு குழுவின் நெறிமுறைகளைப் பின்பற்றுவது அல்லது மிக நல்ல நோக்கம்கொண்ட செயல்திட்டத்தால் மக்களுடைய வாழ்க்கையைப் படைஅணிவகுப்பை நடத்துவதுபோல நடத்துவது என்று அவர் அவர்களிடம் சொல்லவில்லை.

மாறாக, பிதா என்ற முறையில் தேவனோடும், சகோதர சகோதரிகள் என்ற முறையில் ஒவ்வொருவரோடும் எப்படி உறவுகொள்ள வேண்டும் என்று அவர் அவர்களுக்குப் போதித்தார். அவர் அவர்களிடம் பயன்படுத்திய மொழியும், பவுல் தன் நிருபங்களில் பயன்படுத்துகிற மொழியும் நிறுவனங்களின் மொழி அல்ல, அது ஒரு குடும்பத்தின் மொழி.

இன்று நாம் ‘சபை’ என்றழைக்கும் பெரும்பாலானவையெல்லாம் நிறுவனத்துக்குரிய இயக்கவிதியின்படி செயல்படுகின்றன; எனவே, சபை வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் வடிவமைத்திருக்கிறார் என்பதைப்பற்றிய எந்த அறிவும் இன்று அநேக விசுவாசிகளிடம் இல்லை. ‘இங்கு நாம் காரியங்களை எந்த முறையில் செய்கிறோமோ’ அந்த முறைமைக்கு மக்களை ஒத்தசாயலாக்க முயற்சிசெய்கிற விசுவாசப்பிரமாணங்களிலும், செயல்திட்டங்களிலும், வழிமுறைகளிலும் நிறுவனங்கள் தங்கள் கவனத்தைச் செலுத்துகின்றன. பொதுவாக, கனமான உயர்மட்டத்திலுள்ள தலைவர்களாலான ஒரு குழுவே அதிகமான கவனத்தை இழுக்கிறது; அவர்களுடைய நுண்ணறிவுக்கும், ஆலோசனைக்கும் கேள்வியே கேட்காமல் பணிந்தடங்குமாறு மக்கள் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள்.

நிறுவனத்துக்குரிய இயக்கவிதி ஒரு வெளித்தோற்றத்தை மேம்படுத்த மக்களை உற்சாகப்படுத்துகிறது; அவர்கள் நிஜமான நபர்களாக இருக்க அது அவர்களை விடுதலையாக்குவதில்லை. இன்னொருவனைக்

கீழே இழுத்துத்தள்ளி, தான் முன்னுக்கு வர வேண்டும் என்று மக்கள் முயற்சிசெய்வதால், அங்கு வதந்தியும் ஒருவனைப் பெரிய ஆளாகக் காட்டிக்கொள்ளும் விளையாட்டுக்களும் மலிந்து கிடக்கின்றன. உலகத்துக்குரிய ஒரு நிறுவனத்தில் நீங்கள் காண்கிற அதே காரியங்களே இந்த மதரீதியான நிறுவனங்களுக்கும் ஆதாரமாக இருக்கின்றன. நீங்கள் எப்போதாவது ஒரு நிறுவனத்தைவிட்டு வெளியே போக நேர்ந்தால், பெரும்பாலும் நீங்கள் புறக்கணிக்கப்படுவீர்கள். மதரீதியான நிறுவனங்களைவிட்டு வெளியே வந்தபிறகு, “எங்களுடைய நெருக்கமான நண்பர்கள் என்று நாங்கள் கருதிய மக்கள்கூட எங்களை ஒரு பொருட்டாக எண்ணவில்லை; நாங்கள் இருப்பதாகவே அவர்கள் கண்டுகொள்ளவில்லை,” என்று அதைவிட்டு வெளியே வந்த அநேக மக்கள் கூறியிருக்கிறார்கள்.

***குடும்ப இயக்கவிதி***

ஆயினும், குடும்பம் என்ற முறையில், வாழ்க்கை முற்றிலும் வித்தியாசமான வழிமுறைகளின்மேலும், இலக்குகளின்மேலும் கட்டப்படுகிறது. ஆரோக்கியமான ஒரு குடும்பத்தில், ஏதோவொன்றைச் சாதிக்க வேண்டும் என்பதற்காக மக்கள் ஒத்துழைப்பதில்லை; அன்போடு ஒருவரோடொருவர் உறவுகொள்ள அவர்கள் இயல்பாகக் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆரோக்கியமான ஒரு குடும்பத்தில் வேற்றுமை அனுமதிக்கப்படுவதோடு மட்டுமின்றி, அது சீராட்டவும்படுகிறது. மக்கள் அதிகாரத் தோரணையினால் ஒருவரோடொருவர் உறவுகொள்ளாமல், குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் செயல்படுதல் என்ற கொடையின்மூலம் உறவுகொள்ளுகிறார்கள். ஒருவருடைய கார் வழியில் பழுதுபட்டுவிட்டால், மூத்த சகோதரன்தான் அதைக் கவனிக்க வேண்டும், அது அவனுடைய கடமை என்று யாரும் நினைப்பதில்லை. குடும்பத்தில் காரைப்பற்றிய அறிவு யாருக்கு அதிகம் என்று அவர்களுக்கு ஏற்கெனவே தெரியும். எனவே, அவருடைய உதவியை நாடுகிறார்கள்.

மக்கள் ஒத்திருக்க வேண்டும் என்று ஆரோக்கியமான குடும்பங்கள் அவர்களைக் கட்டாயப்படுத்துவதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேகத்தில் ஒன்றாகச் சேர்ந்து வளர குடும்பம் அவர்களை அனுமதிக்கிறது. பல்வேறு குடும்பங்களாகப் பிரிந்துபோகாமல், கருத்து வேறுபாடு கொண்டிருக்க அவர்களுக்குச் சுதந்திரம் உண்டு. அவர்கள் ஒருவர் ஒருவருடைய வாழ்க்கைப் பயணத்தில் சேர்ந்து பகிர்ந்துகொள்ளுகிறார்கள். தங்கள் கொடைகளைக்கொண்டு ஒருவரையொருவர் சேவிக்கிறார்கள். எங்கு உதவியாக இருக்குமோ, அங்கு தங்கள் நுண்ணறிவையும், திறமைகளையும் வழங்குகிறார்கள். மற்றவர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையினூடாய்ச் சென்றாலும் சரி, அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவு அளிக்கிறார்கள்.

ஒருவருக்கொருவர் செய்ய வேண்டும் என்று புதிய ஏற்பாடு விசுவாசிகளை உற்சாகப்படுத்துகிற ‘ஒருவருக்கொருவர்’ என்று கூறப்பட்டுள்ள வேதவாக்கியங்களில் அநேக விசுவாசிகள் இன்று பசுமையான உற்சாகத்தைக் காண்கிறார்கள். போதிப்பதற்கும், ஆலோசனை கொடுப்பதற்கும், சேவிப்பதற்கும், விருந்தோம்பல் அளிப்பதற்கும், அறிக்கைகளைப் பகிர்ந்துகொள்வதற்கும், தேவைகளுக்காக ஜெபிப்பதற்கும், சுயநலவாதியைக் கடிந்துகொள்வதற்கும், இதுபோன்ற வேறு பல காரியங்களை நமக்காகச் செய்வதற்கும் நாம் எந்தப் பணியாளர்களையும் வாடகைக்கு அமர்த்தத் தேவையில்லை; மாறாக, இது சரீரத்தின் வேலை; சரீரம்தான் இதை ஒவ்வொருவருக்காகவும் செய்ய வேண்டும். நாம் இயேசுவில் சேர்ந்து வாழும்போது, அவர் முழுச் சரீரத்திற்கும் கொடைகளை வழங்குகிறார்; எனவே, ஒவ்வொருவரும் தேவனிடமிருந்து பெற்று மற்றவர்களுக்குக் கொடுக்க முடியும், தேவனிடமிருந்து மற்றவர்கள்மூலம் பெற்றுக்கொள்ளவும் முடியும். எனவேதான், ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனையில் ‘சபை’ அனுமதிப்பதைவிட, ஞாயிற்றுக்கிழமை காலையில் வண்டிகளை நிறுத்தும் இடங்களில் ‘சபை’ அதிகமாக நடந்துகொண்டிருக்கிறது என்று சிலர் கூறியிருக்கிறார்கள்.

ஒரு கூட்டம் விசுவாசிகளுக்கிடையே நீங்கள் உண்மையான, புறத்தூண்டுதலில்லாத இயல்பான ஐக்கியத்தை எப்போதாவது அனுபவித்திருந்தால் அது எவ்வளவு ஐசுவரியமாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். போலியாக நடிக்க வேண்டிய அவசியம் இல்லாமல், உங்கள் பலவீனத்தில் உங்களுக்கு ஆதரவு அளித்து, உங்கள் கொடைகளை உறுதிப்படுத்துகிற மக்களோடு சேர்ந்து பயணம் செய்கிற மகிழ்ச்சி எப்பேர்ப்பட்டது! அது உண்மையாகவே போதுமான பலனைத் தருகிறது. ஆம், இப்படிப்பட்ட சில காரியங்கள் நிறுவனம் போன்ற சுற்றுச்சூழலில் கூடிவருகிற விசுவாசிகளுக்கிடையிலும் இருக்கக்கூடும்; ஆனால், அது எப்போதுமே அங்கு இருப்பதில்லை.

குடும்ப இயக்கவிதியை நீங்கள் கண்டு, அதை முழு இருதயத்தோடு அரவணைத்துக்கொள்ளும்போது நீங்கள் அதை இனங்கண்டுகொள்கிறீர்கள் என்பதுதான் முக்கியமான காரியம். இதற்கு நேர்மாறாக, தேவனுடைய இராஜ்ஜியத்தோடு எந்தச் சம்பந்தமும் இல்லாததும், எந்தக் குற்றஉணர்ச்சியும் இல்லாமல் உங்களை தேவனுடைய இராஜ்ஜியத்தைவிட்டுத் தூரமாகக் கொண்டுசெல்லுகிறதுமான கேடான, நிறுவனத்துக்குரிய இயக்கவிதியையும் நீங்கள் இனங்கண்டுகொள்ளுகிறீர்கள்.

தேவனுக்குள் உங்கள் ஜீவனை உற்சாகப்படுத்துகிற வழிகளில் கூடிவருவதற்கு பவுல் விசுவாசிகளை உற்சாகப்படுத்தினார்; அந்த ஜீவனுக்கு அழிவை ஏற்படுத்துகிற சுற்றுச்சூழல்களிலிருந்து விலகி நடக்க அவர்கள் சுதந்தரவாளிகளாக இருக்க வேண்டும் என்றும் அந்த அளவுக்கு அவர் அவர்களிடம் கூறினார். இப்

படிப்பட்ட ஒரு குழுவைவிட்டு அவர் உங்களை வெளியே நடத்துவதாக நீங்கள் உணர்ந் தால், மற்றவர் களோ அல்லது நீங்களோகூட உங்களை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கவேண்டிய தேவையில்லை. நீங்கள் ஒருபோதும் சபையைவிட்டு வெளியே போவதேயில்லை; நீங்கள் ஒருபோதும் கனவுகூட கண்டிராத முறையில், இன்னும் அதிகமாக உண்மையான முறையில் சபையைக் காண அவர் உங்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கக்கூடும்.

***சரீர வாழ்க்கையைக் கண்டுபிடித்தல்***

எனவே, உறவுமுறையிலான சபை வாழ்க்கையைக் கண்டுபிடிக்க நீங்கள் எங்கே போகப்போகிறீர்கள்? ஏன்? நிச்சயமாக, இயேசுவிடம்தான் போகப்போகிறோம். நான் படுசுலபமாகச் சொல்லிவிட்டதுபோல் தோன் றக்கூடும்; சரி, இயேசுவிடம் போகாமல் வேறு யாரிடம் போக முடியும்? நீங்கள் கொள்ளவேண் டும் என்று இயேசு விரும்புகிற ஐக்கியத்தைத் தருவதற்கு அவரை நம்புங்கள். அவரை நம்பக் கற்றுக்கொள்ளுகிற வர்கள்மேலேயே அவருடைய சபை கட்டப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ, அங்கேயே உறவுமுறையிலான சபையை வாழ்வதற்கான சுதந்திரத்தை நீங்கள் கண்டுபிடிக்கலாம். உங்களிடம் இருக்கும் அதே கண்ணோட்டம் எல்லாரிடமும் இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவரை இன்னும் நிறைவாக அறிய வேண்டும் என்ற தாகமுடைய மக்களோடு வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்புகளை எதிர்நோக்கிக் காத்திருங்கள்.

ஆயினும், தேவனை விடுதலையோடு பின்பற்ற வேண்டும் என்ற இருதயம் உள்ளவர்களை நிறுவனம் சார்ந்த அமைப்புமுறைகள் உண்மையாகவே பட்சிப்பதையும், அவர் உங்களை வெளியே அழைப்பதை யும் நீங்கள் காண்பீர்கள். அநேக மக்கள் உடைந்துபோன ஒரு நிறுவனத்தைவிட்டு வெளியே போய், இன்னொரு நிறுவனத்துக்குள் குதித்துவிடுகிறார்கள் அல்லது அவர்களாகவே ஒரு புதிய நிறுவனத்தை ஆரம்பித்துவிடுகிறார்கள். மெதுவாகச் செல்லுமாறும், அவர் உங்களிடம் தெளிவாகப் பேசும்வரை எதை யும் செய்யாதிருக்குமாறும் நான் உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறேன்.

எந்த மக்களோடு தேவன் உங்கள் வாழ்க்கையை இணைக்க ஆரம்பிக்கிறார் என்பதை விழிப்புடன் கவனி யுங்கள்; சிலர் உங்களுடைய ஆயுட்கால நண்பர்களாக இருக்கக்கூடும்; சிலர் புதிய அறிமுகங்களாக இருக்கக்கூடும். எதையும் ஆரம்பிக்க அவசரப்படாதீர்கள்; அவரை—அவருடைய நேர்மையை, அவருடைய கிருபையை, அவருடைய ஜீவனை—அறிய வேண்டும் என்ற இருதயம் உள்ள விசுவாசிகளுக்கிடையே அர்த்தமுள்ள உறவுகளை ஏற்படுத்த அவர் உங்கள் வட்டாரத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறார் என் பதை இனங்காணக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களோடு தங்கள் பயணத்தைப் பகிர்ந்துகொள்கிற, தங்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஒத்திருப்பதற்கு உங்களைத் தந்திரமாக வளைக்காமல் உங்களுடைய வளர்ச்சியை உற்சாகப்படுத்துகிற மக்கள் தேவனுக்கு இருக்கிறார்கள்.

உங்கள் வட்டாரத்தில் நீங்கள் கண்டுபிடிப்பது, இன்னொருவர் அவருடைய வட்டாரத்தில் கண்டுபிடிப்பதி லிருந்து மிகவும் வித்தியாசமாக இருக்கக்கூடும். அது ஒருவேளை ஞாயிற்றுக்கிழமை காலையில் கூடி வருகிற கூட்டத்தில் இருக்கலாம் அல்லது நம்முடைய தெருவில் வாழ்கிற அடுத்த வீட்டுக்காரரோடு இருக்கலாம் அல்லது வீட்டுக் கூட்டங்களிலே இருக்கலாம் அல்லது உங்கள் பாதையின் குறுக்கே தேவன் தானாகவே கொண்டுவருகிற மக்களாக இருக்கலாம். அது எப்படி வந்தாலும் சரி, சபை வாழ்க்கை என்பது வாரத்துக்கு ஒருமுறை அல்லது இருமுறை கூடிவருகிற ஒரு நிகழ்ச்சி இல்லை என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள். நாம் நம் வாழ்க்கையை அவரில் வாழ்ந்து, அதே வாழ்க்கையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கையில், சபை வாழ்க்கை ஒவ்வொரு நாளும் நிகழ்கிறது.

நீங்கள் ஏற்கெனவே வாசித்ததுபோல, அவருடைய ஜீவனை ஒன்றாகச் சேர்ந்து பகிர்ந்து கொள்ள இயேசு தம் விசுவாசிகளை பல்வேறு வழிகளில் அழைக்கிறார். நம் அடுத்த வெளியீட்டில் “சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுவதுபோல நாமும் விட்டுவிடாமல்” என்பதின் பொருள் என்ன வென்பதையும், அவருடைய ஜீவனை ஒன்றாகச் சேர்ந்து பகிர்ந்துகொள்ள தேவன் மக்களை அழைக்கிற வழிகளின் சில விவரங்களையும் நாம் பார்ப்போம்.

ஆழமான சரீர வாழ்க்கையைத் தேடிப்பார்த்து, அது கிடைக்காமல் போகும்போது, நீங்கள் சோர்வடைந்து விடுவீர்கள் என்று எனக்குத் தெரியும்; ஏனென்றால், மிகவும் கொஞ்சப்பேர்தான் இன்று இப்படிப்பட்ட ஆழமான சபை வாழ்க்கையின்மேல் பசியோடு இருப்பதுபோல் தோன்றுகிறது. ஆனால், இப்படிப்பட்ட சரீர வாழ்க்கையைத் தருவதற்கு இயேசுவிடம் வழி இல்லையென்றால், அவர் அதன்மேல் உங்களுக்கு பேரார் வத்தை எழுப்பியிருக்கமாட்டார். ஒருவேளை, அது நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் வழியில் வராமல் போகலாம். எனவே, ஒரேவொரு வழியில் மட்டும் உங்கள் முழுக் கவனத்தையும் வைத்துவிடாதீர்கள்; அப்படிச் செய்தால், ஒருவேளை, அவர் உங்களுக்காகத் திறக்கிற மற்ற வாசல்களை நீங்கள் தவறவிட்டு விடக்கூடும். அவர் தம் சீடர்களுடன் பகிர்ந்துகொண்ட வாழ்க்கையைப்போன்ற உண்மையான சரீர வாழ்க்கையை அறிய நீங்கள் எவ்வளவு பசியோடு இருக்கிறீர்கள் என்று அவரிடம் கூறுங்கள். குடும்ப இயக்கவிதியின்படி வாழ பேரார்வம் கொண்ட மக்களோடு உங்களைச் சேர்க்குமாறு அவரிடம் கேளுங்கள்.

அதன்பின், அவர் ஏற்படுத்தித் தர ஆரம்பிக்கும் உறவுகளை அனுபவித்துமகிழுங்கள். அதை உங்களுடைய அச்சுக்கு ஏற்றார்போல வார்ப்பதற்கு முயற்சிசெய்யாதீர்கள் அல்லது அதை வைத்து ஒரு குழுவை உண்டாக்க வேண்டிய தேவை இருக்கிறது என்றும் நினைக்க வேண்டாம். இயேசுவை மையமாக எடுத்துக் கொள்ளுகிற சகோதர சகோதரிகளோடு—இரண்டு அல்லது மூன்றுபேர் மட்டுமே கொண்ட குழுவாக இருந்தாலும் சரி—உறவு கொள்ளுவதென்றால் என்ன, எப்படி உறவு கொள்ளுவது என்று சாதாரணமாகக் கற்றுக்கொள்ளுங்கள். தேவன் உங்களை நேசிக்கிற அதே வகையில் நீங்கள் மற்றவர்களை நேசியுங்கள். அப்போது உங்களைச் சுற்றிலும், உலகமெங்கும் இயேசு கட்டிக் கொண்டிருக்கும் சபையை நீங்கள் காண்பீர்கள்.

அது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்!

அவர் இதை 2000 ஆண்டுகளாகச் செய்துகொண்டிருக்கிறார். உண்மையில், அவர் இதைச் செய்வதில் நம்மை மலைக்கச்செய்யும் அளவுக்கு வல்லவர்!